அரசைக் கேட்டார்கள். அரசு சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்தைத் தெரிவித்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். சொல்வதைக் கேளுங்கள், நீங்கள். (குறுக்கீடுகள்) திரு. இரவிச்சந்திரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவையை நடத்திக்கொண்டிருக்கும்போது, நீங்கள் உங்களுடைய கோரிக்கைகளை வைக்கலாம். ஆனால், Zero Hour–ல் raise செய்ததற்கு அரசு சார்பிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். அதற்கு மேலே நான். . .(குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அதை நீங்கள் வற்புறுத்துவது உங்களுடைய உரிமை. அது வேறு. ஆனால் நான் பேரவைக்கு ஓர் அறிவிப்பு என்று சொல்லி agenda–விற்குள் போய்விட்டேன். அடுத்த subject–க்குப் போய்விட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் திரும்பவும் அதையே பேசிக்கொண்டிருந்தால் என்னால் அதையெல்லாம் அனுமதிக்க முடியாது. இந்த அறிவிப்பை நான் முடித்துவிடுகிறேன். எது சொல்வதாக இருந்தாலும் பிறகு சொல்லுங்கள்.

3. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(அ) 'காகிதமில்லா சட்டமன்றம்' என்னும் இலக்கினை எய்திடும் வகையில் குழுக்களின் அறிக்கைகள் மற்றும் உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியலில் சில விவரங்களின் மென்பொருள் வடிவம் PDF முறையில் உறுப்பினர்களுக்கு மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளமை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இரண்டாவது அறிக்கை ஆகியன பேரவைக்கு அளிக்கப்பட்டவுடன் அறிக்கைகளின் இரண்டு பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்திலே வைக்கப்படும் என்பதனையும் அவ்வறிக்கைகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதனையும், மேல் நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதனையும், இதன் அச்சிட்ட பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறாது என்பதையும் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 2019 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது முதல் பதினொன்றாவது வரையிலான 1 முதல் 100 வரையிலான வினாக்கள்–விடைகளை

2019 ஜூலை 15] [பேரவைத் தலைவர்]

உள்ளடக்கிய 3 உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியலில் உடுக்குறியிடாத வினாக்களின் எண்கள் மற்றும் உறுப்பினர் பெயர் ஆகிய விவரங்களை மட்டும் உள்ளடக்கிய அட்டவணைப் பட்டியல்கள் தயார் செய்யப்பட்டு, அவற்றின் மென்பொருள் வடிவம் (soft copy) PDF வடிவில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சலில் அனுப்பப்பெற்றுள்ளது என்பதையும் மேலே கூறப்பட்ட 3 பட்டியல்களின் இரண்டு பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன என்பதனையும், உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகளின் நகல்கள் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் அனுப்பி வைக்கப்படும் என்பதனையும், இதன் அச்சிடப்பட்ட பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்படாது என்பதனையும் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

அஞ்சல் துறை போட்டித் தேர்வுகள் தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் நடத்தப்படாது என்று மத்திய அரசு அனுப்பியுள்ள சுற்றறிக்கை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் ஒரு முக்கிய பிரச்சினையை இந்த அவையிலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தைத் தந்தார்கள். நான் அதில் குறுக்கிடவில்லை. அரசாங்கத்தினுடைய கொள்கையும் இருமொழிக் கொள்கைதான், இந்தியை எந்தக் காலத்திலும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று அவர்கள் சொன்னார்கள். ஆக, நீங்களும் இந்தியை ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள், நாங்களும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அதுவல்ல பிரச்சினை. ஆனால், இந்தியைத் திணிக்கிறவர்கள் அதே வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால், இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிற காரணத்தால், நமக்குள் இருக்கிற ஒற்றுமையான இந்தக் கருத்தை ஒரு தீர்மானமாக உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே